JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 152/2012 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW2 | Prosecution /Defence / Court | |
| Name | Venkateshwaran | Caste | |
| Father's Name | Vishwanathan | Calling | |
| Village | Karupparayan koil Opposite, V.C.V. Nagar, | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 29.11.2022

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு வாய்பாடி அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 06.11.2011 ம் தேதி காலை 6-7 மணி இருக்கும். அப்போது பெருந்துறை காவல் நிலையத்தில் இருந்து காவல் ஆய்வாளர் அவர்கள் வந்து சம்பவ இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள்.

2)என்னையும், குமாரசாமி என்பவரையும் சாட்சியாக இருக்க கேட்டுகொண்டதன்பேரில் நாங்கள் இருவரும் சாட்சியாக இருக்க ஒப்பு கொண்டோம். காவல் ஆய்வாளர் அவர்கள் தயாரித்த பார்வை மகசரில் முதலில் குமாரசாமி சாட்சி கையொப்பம் செய்தார். இரண்டாவதாக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். (**பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1)தமிழ்மணியை எனக்கு எப்படி தெரியும் என்றால் என்னுடைய

வீட்டிற்கு செல்லும் வீதியில் நுழையும் இடத்தில் தமிழ்மணி முருக்கு கடை வைத்துள்ளார். அதன்படி அவரை எனக்கு தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள இடம் என்றால் சரிதான். என்னுடைய முகவரி பற்றிய விபரம் தமிழ்மணிக்கு தெரியும் என்றால் சரிதான். எத்தனை வருடமாக தமிழ்மணி அங்கு கடை வைத்துள்ளார் என்றால் சுமார் பதினைந்து வருடமாக வைத்துள்ளார்.

2)காவல் நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் சுமார் ஒரு கி.மீ.தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்தில் நான் என்னுடைய வீட்டில்தான் இருந்தேன் என்றால் சரிதான். பொதுவாக போலிசார் ஒரு பகுதிக்கு வந்தால் அந்த பகுதியில் பொதுமக்கள் கூட்டம் கூடி என்னவென்று விசாரிப்பார்கள் என்றால் சரிதான். சம்பவதினத்தன்று போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த எவ்வளவு நேரம் கழித்து போலிசார் அங்கு வந்தார்கள் என்றால் சம்பவ சமயத்தில் பெருந்துறை பகுதியில் நிறைய இடங்களில் செயின் பறிக்கும் குற்றம் நிகழ்ந்ததால் அவற்றை தடுப்பதற்காக போலிசார் அந்த பகுதியில் வாகனத்தில் பணீக்கம்பாளையம் வரை சென்றுவிட்டு மைக் மூலமாக நகை பறிப்பது குறித்த விழிப்புணர்வு கொடுத்து வந்தார்கள். அதனால் ஐந்து நிமிடத்திலேயே சம்பவ இடத்திற்கு போலிசார் வந்தார்கள்.

3)அதன்பின்னர் உயர் அதிகாரிகள் அங்கு வந்தார்கள். அப்போது அங்கு வந்த போலிசார்கள் அங்கு இருந்த நபர்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது போலிசார் யார் யாரிடம் என்ன கேட்டு எழுதினார்கள் என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. அப்போது என்னிடம் எனது பெயர், முகவரி விபரங்களை போலிசார் கேட்டு எழுதி கொண்டார்களா என்றால் அப்போது கேட்கவில்லை. தமிழ்மணியிடம் போலிசார் அப்போதே அவரது பெயர், முகவரி விபரங்களை கேட்டு வாங்கி என்ன நடந்தது என எழுதி கொண்டார்கள் என்றால் விசாரணை செய்தார்கள், ஆனால் எழுதி கொண்டார்களா என்பது எனக்கு தெரியாது.

4)பக்கத்து வீட்டில் இருப்பவர்களை காவல் நிலையத்திற்கு அடுத்த

நாள் வரச்சொன்னார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்ததற்கு சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டார்கள் என்றும் அதற்காக நான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.

JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 152/2012 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW3 | Prosecution /Defence / Court | |
| Name | Subramaniam | Caste | |
| Father's Name | Karuppanagounder | Calling | |
| Village | Kanjikoil road, | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 29.11.2022

<u>முதல் விசாரணை</u>

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு கடலை வியாபாரம் செய்து வருகிறேன். தமிழ்மணியின் கணவர் துரைபாண்டி என்பவர் என்னுடைய கடைக்கு மிக்சர், முருக்கு ஆகிய பொருட்களை வழங்குவார். 05.11.2011 ம் தேதி மாலையில் அவருடைய மனைவியிடமிருந்து நகையை யாரோ பறித்து சென்று விட்டதாக கூறினார். அந்த நகையானது தாலி கொடியாகும். 5 1/2 பவுன் தாலி கொடி என்றும் கூறினார். மறுபடியும் இருபது, இருபத்தைந்து நாட்கள் கழித்து பெருந்துறை காவல் நிலையத்தில் அழைப்பதாக துரைபாண்டி அழைத்ததன்பேரில் நான் பெருந்துறை காவல் நிலையத்திற்கு வந்தேன்.

2)குற்றம் சாட்டப்பட்ட நபர் யார் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. பரமசிவம், துரைபாண்டி ஆகியோர் இருந்தார்கள். தற்போது அவர்கள் உயிருடன் இல்லை. அவர்களும் விசாரணையின்போது உடன் இருந்தார்கள். குற்றம் சாட்டப்பட்ட நபர் வி.சி.வி. நகரில் தங்க தாலி கொடியை கொடுத்து வைத்திருப்பதாக கூறி அழைத்து சென்றதன் பேரில் காவல் துறை அதிகாரியிடம் வாங்கி ஒப்படைத்தார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). பதினோரு வருடங்களாகிவிட்டதால் அந்த குற்றஞ்சாட்டப்பட்டவரின் முகம்

எனக்கு சரியாக நினைவில்லை. இது சம்பந்தமாக பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1)போலிசார் என்னை விசாரித்தபோது துரைபாண்டியை எனக்கு மிக்சர், முறுக்கு சப்ளை செய்த வகையில் தெரியும் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் அவர்கள் என்னிடம் கேட்காததால் நான் சொல்லவில்லை. என்னை போலிசார் அன்றைய தினம் காலை 8,9 மணி அளவில் அழைத்தார்கள் என்றும் நான் உடனே அப்போதே காவல் நிலையம் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் மாலையில் தான் காவல் நிலையம் சென்றேன். எத்தனை மணிக்கு என்னை வரச்சொல்லி எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் தகவல் சொன்னபோது நேரம் சுமார் மாலை 4 மணி இருக்கும்.

2)நான் காவல் நிலையத்திற்கு மாலை 4 மணிக்கு வந்தேன். போலிசார் விசாரணையில் நான் காவல் நிலையத்திற்கு மதியம் வரச்சொன்னதன்பேரில் சென்றதாக கூறியுள்ளேனா என்றால் அவ்வாறு நான் கூறவில்லை. நான் காவல் நிலையம் செல்லும்போது தமிழ்மணி, துரைபாண்டி ஆகியோர்களை அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு தனியாகதான் சென்றேன். நான் செல்லும்போதே அவர்கள் இருவரும் காவல் நிலையத்தில் இருந்தார்கள். இந்த வழக்கில் எத்தனை பேர் சம்பந்தப்பட்டுள்ளதாக என்னிடம் சொன்னார்கள் என்றால் அது மாதிரி என்னிடம் சொல்லவில்லை. எத்தனை பேர் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

3)காவல் நிலையத்திற்கு நான் சென்றபோது அங்கு குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை நான் பார்க்கவில்லை. எத்தனை பேர் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றம் சாட்டப்பட்ட நபரை நான் காவல் நிலையத்தில் வைத்து பார்க்கவில்லை. ஆனால் காவல் நிலையத்தில் ஒரு நபர் உட்கார்ந்து இருந்தார், ஒரு நபர் நின்றிருந்தார். அவர்கள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. நான் காவல் நிலையம் சென்றவுடன் எனது பெயர், முகவரியை கேட்டு கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கி அனுப்பி விட்டார்களா என்றால் இல்லை. எழுதி வாங்கி கொண்டு தான் அனுப்பினார்கள்.

4)நான் கையொப்பம் செய்த பேப்பரில் போலிசார் எழுதினார். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. என் முன்னிலையில் போலிசார் வேறு யாரையாவது விசாரணை செய்தார்களா என்றால் யாரையும் விசாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கிவிட்டு என்னை அனுப்பி விட்டார்கள் என்றால் சரிதான். ஒரு அரை மணி நேரம் வரை நான் காவல் நிலையத்தில் இருந்தேன். அதன்பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேனா என்றால் இல்லை. கடை வீதிக்கு சென்றேன்.

5)பரமசிவம் காவல் நிலையத்தில் வேலை முடிந்தவுடன் வீட்டிற்கு சென்றாரா என்றால் அது எனக்கு தெரியாது. பரமசிவம் எனக்கு முன்பின் அறிமுகம் இல்லாத நபராவார். அவர் பரமசிவம் என்பதை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் தமிழ்மணியும், துரைபாண்டியும் சொல்லி தெரிந்து கொண்டேன். நான் தமிழ்மணியும், துரைபாண்டியும் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை.